(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே; "தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I move the following amendment standing in my name:—

" For clause (b) of new sub-section (3) of Section 4 proposed posed in Clause 2 of the Bill, substitute the following:

"(b) (i) No elected member of the Council of States and no member elected to the State Legislative Council by the members of the Legislative Assembly shall be a member of the District Development Councils in more than one district; and such elected member of the Council of States or of the State Legislative Council, as the case may be, shall decide as to the District Development Councils of any one district in which he desires to serve

---

* 1975 அக்டோபர் 28 ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1975 நவம்பர் 7] **[திரு. ச. இராமச்சந்திரன்]**

as a member and intimate his decision to the District Collector concerned in such form and within such period as may be prescribed.

(ii) Any member elected to the State Legislative Council by the electorates mentioned in sub-clause (*a*), (*b*) or (*c*) of Clause (3) of Article 171 of the Constitution shall be a member of every District Development Council in the districts comprised in the territorial constituency concerned."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பட வேண்டும்" என்று கோருகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் உறுப்பினராக எம்.எல்.சி.க்களை நியமிக்கும்போது எத்தனை டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் என்று ஒரு எல்லை இருக்க வேண்டும். எல்லை இல்லாமல் எம்.எல்.சி.க்களை 5 டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலுக்கு ஒருவரே உறுப்பினர் என்று சொன்னால் எல்லா இடத்திற்கும் அவரால் போக முடியாத நிலைமை ஏற்படலாம். எல்லா டெவலப்மென்ட் கூட்டங்களும் ஒரு குறிப்பிட்ட ஒரே நேரத்தில் தான் நடக்கின்றன. ஏற்கெனவே இருக்கக்கூடிய எம்.எல்.சி.-க்கள், சட்ட மன்றத்தால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள், டிஸ்டிரிக்ட்

டெவலப்மென்ட் கவுன்சில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மதுரை மாதிரி இடத்திலே இரண்டு டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில்கள் இருக்கின்றன. அல்லது இராமநாதபுரம் பகுதியைச் சேர்க்கலாம். அப்படியில்லாமல் எல்லா இடங்களுக்கும் போவது என்றால் சிரமம் தான் ஏற்படும். எனவே, இந்த மசோதாவை நிறைவேற்றும்போது இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தச் சட்ட முன் வடிவிலே பேரூராட்சி அங்கத்தினர்கள் கலெக்டரால் நாமினேஷன் செய்யப்பட்டு ரொடேஷனில் வருவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முனிசிபாலிடி சேர்மன்கள் இந்த மாவட்ட வளர்ச்சிக் குழுவிலே இல்லை. எனவே அவர்களுக்கும் இதிலே இடம் கொடுத்து அவர்களின் கருத்தையும் நாம ஏற்றுச் செயல்படுவது நியாயமாகும். பேரூராட்சி உறுப்பினர்களுக்கும் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் பங்கு கொடுப்பது ஜனநாயக முறைப்படி வரவேறகக் கூடியது என்பதால் ஜனநாயக முறைப்படி வகுக்கப்பட்ட இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சிக் குழுவின் கூட்டத்திற்கு அரசால் ஏற்படுத்தப்பட்ட கழகங்களின் (போர்டுகள்) பிரதிநிதிகள் வரவேண்டும் என்று இருக்கிறது. அதைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி மாவட்ட வளர்ச்சிக் குழுவின் கூட்டத்திற்கு மின்சார வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதி வாரியம் போன்றவற்றின் பிரதிநிதிகள் வருகிறபோது யார் வருகிறார்கள் என்றால் சிறிய அதிகாரிகள் வருகிறார்கள். ஏ.இ. போன்றவர்கள் வருகிறார்கள். சூப்ரெண்டிங் இன்ஜினியர் போன்றவர்கள் தான் வர வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கலெக்டர் தான் டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலின் தலைவராக இருக்கிறார். மற்ற மாநிலங்களில் "நான்-அபிஷியல்ஸ்" தலைவர்களாக இருக்கிறார்கள். அதுபோல இங்கேயும் செய்யப்பட வேண்டும் என்று கூறி, இந்த மசோதா வரவேற்கக் கூடியது என்று கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

1975 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதன் முதலாக மாவட்ட வளர்ச்சிக் குழுவில் பேரூராட்சி மன்றத்திற்குப் பிரதிநிதித்துவம் தரவேண்டும். பேரூராட்சி மன்றத் தலைவர்களை அதில் சேர்க்கலாம் என்பது தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பேரூராட்சி மன்றங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டியதுபோல எல்லா பேரூராட்சி மன்றத் தலைவர்களையும் இதில் சேர்ப்பது என்றால் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்பதே பெரிய அமைப்பாகி விடும். ஆகவே, இப்போது முதலில் நுழைவதற்கு வாய்ப்புக் கிடைத்ததே என்று நினைத்து, படிப்படியாக இவர்கள் ஆற்றுகிற பணிகளைப் பார்த்து, தேவையானால் பின்னால் எல்லோரையும் சேர்த்துக்கொள்வதுபற்றி கவனிக்கலாம் என்று திரு. வகாப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசுகிறபோது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் கலந்துகொள்ளும்போது, எந்த அடிப்படையில் கலந்துகொள்வார்கள் என்று கேட்டார்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் இங்கு சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும், ஆளுநர் அவர்களால் நியமனம் செய்யப்பெற்றும் வருகிறார்கள். இன்னொரு பகுதியினர் ஆசிரியர் தொகுதி, பட்டதாரிகள் தொகுதி, உள்ளாட்சித் தொகுதியினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். இதை நாம் நன்றாக ஆராய்ந்து, சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள், ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறவர்கள் எந்த எந்த மாவட்டத்தில் தங்கியிருக்கிறார்களோ அல்லது எந்த மாவட்டத்தில் பணியாற்ற விரும்புகிறார்களோ அந்த மாவட்டத்திலுள்ள இரண்டு டெவலப்மெண்டு கவுன்சிலிலும் கலந்துகொண்டு பணியாற்ற வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி, பட்டதாரி தொகுதி, ஆசிரியர் தொகுதி, உள்ளாட்சித்துறை தொகுதி ஆகியவற்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள் அவர்களது தொகுதி அடங்கியுள்ள மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அனைத்திலும் பங்கேற்றுக் கொள்ள வகை

செய்யப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தங்கள் தொகுதி மக்களுக்குப் பணியாற்ற வாய்ப்பளிக்கப்படவேண்டும் என்கிற அடிப்படையில்தான் இப்படி மேலவை உறுப்பினர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் பணியாற்ற திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

திரு. துரைமுருகன் அவர்கள் மின்சார வாரியம், குடிநீர் வாரியம் ஆகியவற்றின் பிரிதிநிதிகள் கலந்துகொள்வது பற்றிக் குறிப்பிடுகிறபோது அந்தத் துறையின் தலைவர்களே கலந்து கொள்ளவேண்டுமென்று விருப்பப்பட்டார்கள். வாரியத்தின் தலைவரே கலந்துகொள்வது என்றால் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டங்களுக்குப் போவதே அவர்கள் வேலையாகப் போய்விடும். மாநில அளவில் உள்ள அதிகாரிகள் கலந்துகொள்ள முடியாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. துரைமுருகன் அவர்கள் வாரியத் தலைவர்களே கலந்துகொள்ளவேண்டுமென்று சொல்ல வில்லை. மாவட்ட தலைமை அதிகாரிகள் கலந்துகொள்ளவேண்டு மென்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவர் பேசும்போது நானும் கவனித்திருந்தேன். ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்டு என்று குறிப்பிட்டார்கள். மாவட்ட அளவில் யார் யார் இருக் கிறார்களோ அந்த அந்தத் தலைமை அதிகாரிகள் கலந்துகொள் வார்கள் என்கிற உறுதியினை அவருக்குத் தெரிவித்து, அதற்கான ஆணையை அரசு பிறப்பிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரே தலைவராக இருக்கவேண்டும் என்று அவர் சொன்னது கொள்கை பற்றிய பிரச்னையாகும். பல மாநிலங்களில் அப்படி இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது மாவட்ட ஆட்சித் தலைவரே தலைவராக இருந்துதான் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் சிக்கலோ, கஷ்டங்களோ இருப்பதாக அரசாங்கத்திற்கு எந்தவிதமான தகவல்களும் வரவில்லை. ஆகையால், அந்தக் கருத்து கொள்கை

பற்றிய கருத்து இந்த மசோதாவில் விவாதிப்பதற்கு இடமில்லாதது என்று தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, in the District Development Council different resolutions are adopted after proper deliberations and representations made by the members participating in the meeting of the District Development Council. But the follow-up action that is being taken is not intimated to the members in the same way as is done in this House, namely, the constitution of an Assurance Committee. So, I suggest that a separate committee be constituted to go into the representations made and the resolutions passed at the meeting of the District Development Council and take follow-up action. Will the Hon. Minister be pleased to make a statement in this behalf.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த பில்லில் அது எப்படி வரும்? டி.டி.ஸி. பற்றி பொதுவாகப் பேச ஆரம்பித்தால் முடியாது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/75) திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள் தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/75) பேரவையில் அய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.